www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

T

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண்: 2419

நேரம்: 3.00 மணி

## பொதுத்தமிழ்

மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 14×1=14

1) 'நான் வெற்றுவெளியில் அலைந்து கொண்டிருக்கிறேன்' எனது முகத்தைத் தேடியபடி என்று சுகந்தி சுப்பிரமணியன் தேடுவதாகக் குறிப்பிடுவது

அ) தமது வீட்டு முகவரியை
ஆ) தமது குடும்பத்தை
இ) தமது அடையாளத்தை
ஈ) தமது படைப்புகளை

2) பிழையான தொடரைக் கண்டறிக.

அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனா.
ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனா.
இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.
ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

3) 'கடல் தானை' - என்பதன் இலக்கணக்குறிப்பு

அ) உவமைத்தொகை
ஆ) உம்மைத்தொகை
இ) தொழிற்பெயா
ஈ) வினைத்தொகை

4) "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே" - இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல்

அ) தொல்காப்பியம்
ஆ) நன்னூல்
இ) அகத்தியம்
ஈ) இலக்கணவிளக்கம்

5) "உவா உற வந்து கூடும் உடுபதி இரவி ஒத்தார்" யார் யார்?

அ) சடாயு, இராமன்
ஆ) இராமன், குகன்
இ) இராமன், சுக்ரீவன்
ஈ) இராமன், சவரி

6) "மயிலையின் அஞ்சிறைத் தும்பி" என்ற சொல்லாய்வுக் கட்டுரைகள் தொகுப்பாக வெளிவந்த இதழ்

அ) செந்தமிழ் செல்வி
ஆ) புகழ்செல்வி
இ) விளக்கு
ஈ) தமிழின குரல்

7) பொருத்துக:

அ) திருவல்லிக்கேணி ஆறு - 1. மாவலிபுரச் செலவு
ஆ) பக்கிங்காம் கால்வாய் - 2. கல் கோட்டி
இ) பல்லாவரம் - 3. அருங்காட்சியகம்
ஈ) எழும்பூா - 4. கூவம்

அ) 1, 2, 4, 3
ஆ) 4, 2, 1, 3
இ) 4, 1, 2, 3
ஈ) 2, 4, 3, 1

8) வியந்து - பகுபத பிரிப்பு முறை தோக.

அ) விய+ந்+த்+உ
ஆ) விய+த்(ந்)+த்+உ
இ) விய+த்+த்+உ
ஈ) விய+ந்+உ

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



9) வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்

அ) மணல் அள்ளுதல் ஆ) பருவநிலை மாற்றம்

இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீா உறிஞ்சப்படுதல்

10) 'அல்லல் படுப்பதூஉம் இல்' - எவரோடு பழகினால்?

அ) தீயினத்தாா ஆ) வாள்போல் பகைவா

இ) மெய்ப்பொருள் காண்பவா ஈ) எண்ணியாங்கு எய்துபவா

11) தமிழா மானிடவியல் என்ற நூலை இயற்றியவா

அ) பூமணி ஆ) பக்தவச்சல பாரதி

இ) கி.மணி ஈ) ஜலாலுத்தீன் ரூமி

12) கோடைமழை சிறுகதையின் மையக்கருத்து ...........

அ) அரவணைப்பு ஆ) மனிதநேயம்

இ) அக்கறை ஈ) ஏதிலி குழந்தை மீட்பு

13) சீதாள பத்திரம் என்பது

அ) தாழைமடல் ஆ) நெல்தாள்

இ) கம்பந்தட்டை ஈ) பனையோலை

14) வெங்கதிா என்னும் சொல்லின் பொருள்

அ) ஒளிாகின்ற கதிரவன் ஆ) நிகரில்லாத தமிழ்

இ) பொதிகை மலை ஈ) புற இருள்

## பகுதி - II

### பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக: **3×2=6**

15) நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது - விளக்குக.

16) அரசரோடு நட்புப் பாராட்டினாலும் செய்யத்தகாதன யாவை?

17) இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினா?

18) திருமயிலைப் பதிகத்தில் காணப்பெறும் விழாக்களுள் நான்கினை எழுதுக.

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: **2×2=4**

19) 'பருவத்தே பயிா செய்' - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

20) நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் விதத்தைக் குறிப்பிடுக.

21) மையாடல் விழா என்றால் என்ன?

### பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக: **7×2=14**

22) தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக:

ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறாா.

23) பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:

அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான.

24) கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடா எழுதுக:

திரை, காண், கைதட்டல், மக்கள்

25) புணாச்சி விதி தருக:

அ) புதுப்பெயல் அல்லது

ஆ) முன்னுடை

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



26) மூன்றாவது சீா அமைத்து எழுதுக:

அ) நல்லவை செய்யின் ...............

ஆ) அவமதிப்பு ஆன்ற .............

27) கலைச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்கள் தருக:

i) Multiplex complex

ii) Rubber stamp

28) விடைக்கேற்ற வினா அமைக்க:

சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீாசெய்யவும் பாதுகாப்பாகப் பயணிக்கவும் உதவுகின்றன.

29) வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:

ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.

30) வெண்பாவின் ஈற்றுச்சீரில் வரும் வாய்பாடுகள் யாவை?

## பகுதி - III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: **2×4=8**

31) ''எங்கிருந்தோ வருகிறது
வண்ணத்துப்பூச்சியொன்று
பறவைகளும் வரக்கூடும் நாளை'' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

32) ஏதேனும் இரு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழலைக் கற்பனையாகப் படைக்க.

33) குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.

34) அதியமானின் ஈகைப் பண்பை சிறுபாணாற்றுப்படை வழி நின்று விளக்குக.

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: **2×4=8**

35) பேரிடா மேலாண்மை ஆணையம் விளக்குக.

36) சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

37) மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

38) ஒதற்பிரிவு - குறிப்பு வரைக.

### பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக: **3×4=12**

39) ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

''உடம்பாடு இலாதவா வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று'.

- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



40) இலக்கிய நயம் பாராட்டுக. மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக:

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவாகள் விழியெறிந்து வானவரை யழைப்பா
கமனசித்தா வந்துவந்து காயசித்தி விளைப்பா
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தோக்காலும் வழுகும்
கூனலினம் பிறைமுடித்த வேணியலங் காரா
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே.

- திரிகூடராசப்பக் கவிராயா

41) பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக:

அ) குற்றம் பாக்கின் சுற்றம் இல்லை

(அல்லது)

ஆ) முயற்சி திருவினையாக்கும்

42) தமிழாக்கம் தருக:

1. The limits of my language are the limits of my world.
2. To error is human; to forgive is divine.
3. Honesty is the best policy.
4. Failure is the stepping stone to success.

43) வெண்பாவிற்கான இலக்கணம் யாது?

(அல்லது)

குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக: 3×6=18**

44) அ) எச்.ஏ. கிருட்டிணனாா 'கிறித்தவக் கம்பரே' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக. (அல்லது)

ஆ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிாகளுடன் கொண்டிருந்த உறவுநிலையைப் பாடப்பகுதிவழி நிறுவுக.

45) அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக. (அல்லது)

ஆ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியா மாணவாகளுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

46) அ) ''கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன'' - இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

(அல்லது)

ஆ) சங்ககால வரலாற்றை அறிந்து கொள்ள 'புகளூாக் கல்வெட்டு' எவ்வகையில் துணைபுரிகிறது - விளக்குக.

## பகுதி - V

47) அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக: **4+2=6**

அ) அறிவும் புகழும் ............ எனத் தொடங்கும் ஒளவையாா பாடல்.

ஆ) 'மகற்கு' .......... என முடியும் திருக்குறள்.

.............

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com